தேதி 31.12.2025 நேரம் மாலை 6.10 மணி

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : சரவணகுமார்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இன்று, அயோத்தி ராமர் கோவில் பிராணப் பிரதிஷ்டை விழாவின் 2ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.
- மத்திய தகவல் – ஒலிபரப்பு துறை இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன் இன்று புதுடெல்லியில், பாரத் – 2026 என்னும் அரசு நாட்காட்டியை வெளியிட்டார்.
- புதுச்சேரியில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி உள்ளிட்ட தலைவர்கள், மாநில மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்து தெரிவித்துள்ளனர்.
- புதுச்சேரியில் புத்தாண்டு கொண்டாட்டங்களை ஒட்டி, பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப் பட்டுள்ளன.

<u>அயோத்தி</u> (15)

இன்று, அயோத்தி ராமர் கோவில் பிராணப் பிரதிஷ்டை விழாவின் 2ஆம் ஆண்டு நிறைவை ஒட்டி, பிரதமர் திரு. நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இந்நாள், இறை நம்பிக்கை மற்றும் பாரம்பரியத்தின் தெய்வீகத் திருநாள் என்று, சமூக ஊடகப் பதிவு ஒன்றில் அவர் கூறியுள்ளார். இந்தியா மற்றும் வெளிநாடுகளிலுள்ள ராம பக்தர்கள் சார்பில் தாம் பகவான் ஸ்ரீராமரின் பாதம் பணிந்து போற்றுவதாக, பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே அயோத்தி ராமர் கோவிலில், இன்று பிரதிஷ்ட துவாதசி தினத்தை ஒட்டி, பாரம்பரிய முறையில் வேள்விகள் மற்றும் பல்வேறு சடங்குகள் நடைபெற்று வருகின்றன. பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், உத்தரபிரதேஷ் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் மற்றும் பெரும் எண்ணிக்கையிலான பக்தர்கள் இதில் பங்கேற்றனர். அயோத்தி ராமர் கோவிலின் வெளிப் பிரகாரத்தில் உள்ள அன்னபூர்ணா தேவி ஆலயத்தின் கோபுர உச்சியில் பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், காவிக் கொடி ஏற்றி வைத்தார்.

***<u>புத்தர் (13)</u>***

உத்தரபிரதேஷ் மாநிலம் பிப்ரஹ்வா பகுதியில் இருந்து, கடந்த 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் கண்டெடுக்கப்பட்டு, 125ஆண்டுகளுக்கும் மேலாக பிரிட்டனில் தனியார் வசமிருந்த பகவான் புத்தரின் உடல் எச்சங்கள், மத்திய அரசின் தொடர்ச்சியான முயற்சிகளால் கடந்த ஜூலை மாதம் மீட்கப்பட்டதை தொடர்ந்து, புத்தர் உடல் எச்சங்களின் கண்காட்சி, புதுடெல்லியிலுள்ள ராய் பித்தோரா கலாச்சார வளாகத்தில், வரும் சனிக்கிழமை தொடங்கவுள்ளது. அன்றைய தினம் பிரதமர் திரு. நரேந்திர மோடி, கண்காட்சியை தொடக்கி வைக்கிறார். வரலாறு, தொல்லியல் மற்றும் ஆன்மிக ரீதியில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த, பகவான் புத்தரின் உடல் எச்சங்கள் மீட்கப்பட்டு, பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படுவது, நாட்டின் கலாச்சார மற்றும் தூதரக வரலாற்றில் முக்கிய தருணமாக அமையும் என்று, மத்திய கலாச்சார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

*ஆண்டு இறுதி-உற்பத்தி 1 (7)*

இன்றுடன் முடிவடையும் 2025-ஆம் ஆண்டு, இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் முக்கிய அத்தியாயமாக அமைந்துள்ளது. அரசின் சீர்திருத்தக் கொள்கைகள், முன்னேற்றமாகவும் முக்கிய தாக்கங்களாகவும் மாறியதை இவ்வாண்டில் நாம் கண்டோம். இன்று, சீர்திருத்தங்களின் ஆண்டு என்னும் இந்த சிறப்பு தொடரில், இவ்வாண்டு உலகின் புதிய உற்பத்தி எஞ்சினாக இந்தியா மேம்பட்டுள்ளது குறித்து, ஒரு தொகுப்பு.....

*ஆண்டு இறுதி-உற்பத்தி 2(17 )*

2025ஆம் ஆண்டில் இந்தியா 7.8 சதவிகித வளர்ச்சியுடன் முக்கிய திருப்புமுனை ஒன்றை எட்டி உலகிலேயே மிக வேகமாக வளரும் பொருளாதாரங்களில் ஒன்றாகவும், உலகின் முக்கிய உற்பத்தி கேந்திரமாகவும் மேம்பட்டுள்ளது. நாட்டின் உற்பத்தி வசதிகள் விரிவடைந்து, நேரடி அந்நிய முதலீடுகளும் அதிகரித்ததால், உலக அளவிலான பொருள் விநியோக சங்கிலியில் இந்தியாவின் பங்களிப்பு தொடர்ந்து வலுப்பெற்று வருகிறது. உயர் மதிப்பு வாய்ந்த பொருட்களின் சிக்கலான உற்பத்தியில் இந்தியா காலெடுத்து வைப்பதைக் குறிக்கும் வகையில், நாட்டின் முதலாவது tempered glass உற்பத்தி வசதிகள் நொய்டாவில் தொடங்கியது, இவ்வாண்டில் முக்கிய முன்னேற்றமாக அமைந்தது. புதுப்பிக்கவல்ல எரிசக்தி துறையைப் பொருத்தவரை, இந்தியாவின் சோலார் மின் உற்பத்தி திறன், இவ்வாண்டில் 100 ஜிகா வாட்டாக அதிகரித்து, சோலார் பேனல் உற்பத்தியும் கணிசமாக உயர்ந்துள்ளது. 2025ஆம் ஆண்டில் உற்பத்தி துறையின் வளர்ச்சி காரணமாக நாட்டில் பெரிய அளவில் வேலை வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. மின்னணு உற்பத்தி துறையில் மட்டும் தற்போது 25 லட்சம் வேலை வாய்ப்புகள் உள்ளன. ஆடவர் வேலை வாய்ப்பின்மை

*ஆண்டு இறுதி-உற்பத்தி 3(12 )*

விகிதம், தேசிய அளவில், 5 சதவிகிதமாக குறைந்துள்ளது. பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசின் சீர்திருத்த நடவடிக்கைகள், இவ்வாண்டில் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டதால், நாட்டின் ஆளுகைக் கட்டமைப்பும் தொடர்ச்சியான முறையில் வலுவடைந்து வருகிறது. 2ஆம் கட்ட GST சீர்திருத்தங்களின் கீழ் 5 மற்றும் 18 சதவிகித வரி அடுக்குகள் திருத்தி அமைக்கப்பட்டதால், வரி இணக்கச் சூழல் மேம்பட்டு, உற்பத்தியாளர்களின் செயல்பாட்டுச் சிக்கல்களும், உற்பத்தி செலவுகளும் குறைந்துள்ளன. தொடர்ச்சியான சீர்திருத்தங்கள், பயிற்சி பெற்ற மனிதவளம், மற்றும் உலக நாடுகளுடன் ஆழமான ஒருங்கிணைப்பு மூலம், 2025ஆம் ஆண்டில் இந்தியா உலகின் முன்னணி உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பொருளாதாரமாக, வலுவான முறையில் மேம்பட்டு இருப்பதில் ஐயமில்லை.

*முருகன் காலண்டர்* (15)

மத்திய தகவல் – ஒலிபரப்பு துறை இணை அமைச்சர் டாக்டர் எல். முருகன் இன்று புதுடெல்லியில், பாரத் – 2026 என்னும் அரசு நாட்காட்டியை வெளியிட்டார். 2047ஆம் ஆண்டிற்குள் முன்னேறிய இந்தியா என்றும் இலக்கை எட்டுவதற்கான நாட்டின் பயணத்தில், பல்வேறு சீர்திருத்தங்கள் அடங்கிய முக்கியமான பல அத்தியாயங்கள், 2025ஆம் ஆண்டில் எழுதப்பட்டுள்ளதாக, நிகழ்ச்சியில் பேசுகையில் அவர் கூறினார். அவர், அனைவருக்குமான வளர்ச்சி, பொருளாதாரத்தில் வலுவான நெகிழ்வுத் தன்மை, நீண்டகால மேம்பாட்டிற்கான நீடித்த அஸ்திவாரம் ஆகிய தெளிவான நோக்கங்களே, சீர்திருத்தங்களுக்கு அடிப்படை என்றும், அவர் குறிப்பிட்டார்.

2026ஆம் ஆண்டிற்கான அரசு நாட்காட்டி, அரசின் முன்னுரிமைகளை தெளிவாக வெளிப்படுத்தும் வகையில் மிகுந்த கவனத்துடன்

வடிவமைக்கப் பட்டுள்ளதாக, தகவல்-ஒலிபரப்புத் துறைச் செயலர் திரு. சஞ்சய் ஜாஜூ, நிகழ்ச்சியில் பேசுகையில் கூறினார். அரசு நாட்காட்டிகள், முக்கிய தகவல் தொடர்புக் கருவியாகவே மேம்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

<u>வாழ்த்து</u> (10 )

புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி, மாநில மக்கள் அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்து தெரிவித்துள்ளார். சமூக நலத் திட்டங்கள், கல்வி, சுகாதார மேம்பாடு, வேலை வாய்ப்பு, உள் கட்டமைப்பு உள்ளிட்ட பல்வேறு மக்கள் நலத் திட்டங்கள் புதுச்சேரியில் திறம்பட செயல்படுத்தப் படுகின்றன என்றும், வருங்காலத்திலும், புதுச்சேரியை வளமும் – நலமும் நிறைந்த மாநிலமாக மாற்ற அனைவரும் அரசுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்றும், அவர் தமது வாழ்த்துச் செய்தியில் கேட்டுக் கொண்டுள்ளார். அனைத்து மக்களின் வாழ்விலும், மகிழ்ச்சி, அமைதி, ஆரோக்கியம் மற்றும் வளத்தை கொண்டுவர தாம் இறைவனை வேண்டுவதாக திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.
மாநில உள்துறை அமைச்சர் திரு. நமச்சிவாயம், சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் திரு. சிவா உள்ளிட்டவர்களும், மக்களுக்கு புத்தாண்டு வாழ்த்துத் தெரிவித்து செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

*<u>புதுச்சேரி பாதுகாப்பு (16)</u>*

புதுச்சேரியில் புத்தாண்டு கொண்டாட்டங்களை ஒட்டி பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக்கப் பட்டுள்ளன. கடற்கரைச் சாலை உட்பட மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடங்களில் குழந்தைகள் தொலைந்து விடாமல் இருக்க, குழந்தைகளின் கையில், பெற்றோர் பெயர் மற்றும் கைபேசி எண் அடங்கிய tag கட்டப்படும் என முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கலைவாணன் இன்று புதுச்சேரியில் செய்தியாளர்களிடம்

தெரிவித்தார்.10க்கும் மேற்பட்ட இடங்களில் வாகனங்களுக்கு பார்க்கிங் வசதி செய்யப் பட்டுள்ளதாகவும், இத்தகைய இடங்களுக்கும் கடற்கரைச் சாலைக்கும் இடையே, 30 பேருந்துகள் இலவசமாக இயக்கப்படும் என்றும் அவர் கூறினார். பாதுகாப்பு பணிக்காக கண்காணிப்பு கோபுரங்கள் அமைக்கப் பட்டுள்ளதாகவும், 70 இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியிலும், ஐந்நூறு போலீசார் போக்குவரத்தை சீரமைக்கும் பணியிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ட்ரோன்கள் மூலமாகவும் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதாகவும், திரு. கலைவாணன் கூறினார்.

*காலாப்பட்டு சிறை (5 )*

காலாப்பட்டு மத்திய சிறையில் சிறைத்துறை அதிகாரிகள் திடீர் சோதனை மேற்கொண்டு, சிறை வளாகத்தில் மண்ணில் தோண்டி புதைத்து வைத்திருந்த செல்போனை பறிமுதல் செய்துள்ளனர். இது குறித்து காலாப்பட்டு போலீசில் புகார் செய்யப்பட்டு, மேற்கொண்டு விசாரணை நடைபெற்று வருகிறது.

*புதுச்சேரி ஊர்தி (9)*

புதுடெல்லியில் வரும் ஜனவரி 26ஆம் தேதி நடைபெறவுள்ள குடியரசு தின அணிவகுப்பில், புதுச்சேரி கைவினை கலாச்சாரத்தின் வளமான பாரம்பரியம் மற்றும், ஆரோவில்லின் நோக்கம் என்பது குறித்து புதுச்சேரி அரசின் அலங்கார ஊர்தி இடம்பெற உள்ளது. புதுச்சேரியின் கலாச்சார பாரம்பரியம், சுடுமண் சிற்பக் கலை உள்ளிட்ட கைவினைத் திறன்கள், மற்றும், உலகம் போற்றும் ஆன்மிக நகரமான ஆரோவில்லின் கனவை வெளிப்படுத்தும் வகையில், இந்த அலங்கார ஊர்தி வடிவமைக்கப்படும் என மாநில அரசின் செய்திக்குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

*ஏற்றுமதி 1 (4)*

வெளிநாட்டு சந்தைகளை எளிதில் அணுகத் தேவையான உதவிகளை, இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு வழங்க, மத்திய அரசு, ஏற்றுமதி பெருக்க இயக்கத்தின் கீழ், புதிய முன்முயற்சித் திட்டம் ஒன்றை அறிவித்துள்ளது. இது குறித்து கூடுதல் விவரங்கள்...

*ஏற்றுமதி 2 (14)*

புதிய முன்முயற்சி திட்டத்தின் கீழ், இந்திய ஏற்றுமதியாளர்கள், உலக அளவில் பொருள் வாங்குவோரை தொடர்பு கொள்ளவும், சர்வதேச வர்த்தக கண்காட்சிகளில் பங்கேற்கவும், வெளிநாடுகளுக்கான வர்த்தக குழுக்களில் இடம்பெறவும், அமைப்பு ரீதியில் ஆதரவு அளிக்கப்படும் என்றும், ஏற்றுமதித் தேவைக்கான நிதி உதவிகள் போதிய அளவில் கிடைப்பதை, அரசு உறுதிப்படுத்தும் என்றும், மத்திய தொழில்-வணிக அமைச்சகம் தெரிவித்துள்ளது. சிறு-குறு-நடுத்தரத் தொழில் நிறுவனங்கள், அறிமுக ஏற்றுமதியாளர்கள், மற்றும் முன்னுரிமைத் துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கு, இதில் முக்கியத்துவம் அளிக்கப்படும் என்றும், அமைச்சகம் கூறியுள்ளது. மத்திய அரசின் வர்த்தகத் துறை, நிதி அமைச்சகம், சிறு-குறு- நடுத்தர தொழில் துறை அமைச்சகம் ஆகியவை இணைந்து, வெளிநாடுகளிலுள்ள இந்திய தூதரகங்கள், வர்த்தகப் பொருள் வாரியங்கள், மற்றும் தொழில்துறைக் கூட்டமைப்புகளின் ஆதரவுடன், ஏற்றுமதிப் பெருக்க இயக்கத்தை செயல்படுத்தி வருகின்றன.

CBSE (6)

CBSE பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகள் வரும் மார்ச் மாதம் 11ஆம் தேதியும், 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வுகள் ஏப்ரல் 10ஆம் தேதி தொடங்கும் என மத்திய இடைநிலை கல்வி வாரியம் அறிவித்துள்ளது. முன்னதாக இரு தேர்வுகளும், மார்ச் மாதம் 3 ஆம் தேதி தொடங்க இருந்த

நிலையில், நிர்வாகக் காரணங்களுக்காக இந்த மாற்றம் அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>*வானிலை* (15)</u>

வளிமண்டல கீழடுக்கு சுழற்சி காரணமாக, இன்று கடலோர தமிழகத்தின் ஒருசில இடங்களிலும், உள் தமிழகத்தில் ஓரிரு இடங்கள், மற்றும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடுத்த 3 நாட்கள் வரை ஒருசில் இடங்களில் மழை இருக்கலாம் என்றும், அதிகாலை வேளையில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே கடந்த 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக மதுரை விமான நிலையத்தில், 34.6 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை பதிவாகியுள்ளது. சமவெளிப் பகுதிகளைப் பொருத்தவரை, தர்மபுரியில்,18.5 டிகிரி செல்சியஸ், மற்றும், மலைப் பகுதிகளைப் பொருத்தவரை, கொடைக்கானல் மற்றும் உதகமண்டலத்தில், 9.4 டிகிரி செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகியுள்ளது.

<u>*பரீக்க்ஷா பே சர்ச்சா (9)*</u>

வரும் ஜனவரி மாதம் நடைபெற உள்ள, பிரதமரின் 9ஆம் ஆண்டு பரிக்க்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்கான போட்டியில் பங்கேற்க, இந்தியா மற்றும் வெளிநாடுகளில் இருந்து, இதுவரை 3 கோடிக்கும் அதிகமான மாணவர்கள், ஆசிரியர்கள், மற்றும், பெற்றோர்கள், பதிவு பெற்றுள்ளனர். தேர்வுக் காலத்தில் மாணவர்களின் மன நலனை உறுதிப்படுத்தும் நோக்கிலான பிரதமரின் பரிக்க்ஷா பே சர்ச்சா நிகழ்ச்சி,

நிஜமான மக்கள் இயக்கமாக மாறி இருப்பதை வெளிப்படுத்தும் வகையில், வரலாற்றுச் சிறப்பு மிக்க இந்த மைல்கல் அமைந்து இருப்பதாக, மத்திய கல்வியமைச்சகம் கூறியுள்ளது.